# அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2018

**வகுப்பு 11** பதிவு எண் | | | | | | |

நேரம்: 2.30 மணி **வரலாறு** மொத்த மதிப்பெண்கள்: 90

**அறிவுரைகள்:**
1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

## பிரிவு - I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** **20×1=20**

1) ஹரப்பா மக்களுக்கு முக்கியமான வாழ்வாதார வழிமுறையாக .................. இருந்தது.
   அ) வேளாண்மை ஆ) மட்பாண்டம் செய்தல்
   இ) கைவினைத் தொழில்கள் ஈ) மீன்பிடித்தல்

2) **கூற்று (கூ)** : முற்கால வேதகாலத்தில் குழந்தைத் திருமணம் இருந்ததற்கான சான்றுகள் இல்லை.
   **காரணம் (கா)** : பின் வேதகாலத்தில் பெண்கள் சடங்குகளிலிருந்து விலக்கி வைக்கப்பட்டுள்ளனர்.
   அ) கூற்றும் காரணமும் சரியானவை. காரணம் கூற்றை விளக்குகிறது.
   ஆ) கூற்று சரியானது. காரணம் தவறானது.
   இ) கூற்று, காரணம் இரண்டும் சரியானவை.
   ஈ) கூற்றும் காரணமும் சரியானவை. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

3) அஜாத சத்ருவுக்கும் புத்தருக்குமிடையேயான சந்திப்பைக் குறிப்பிடும் பௌத்தநூல்
   அ) சீவகசிந்தாமணி ஆ) அச்சரங்க சூத்திரம்
   இ) கல்ப சூத்திரம் ஈ) சமண்ணப சுத்தம்

4) அசோகரது தூண்களில் உள்ள பிராமி எழுத்துக்களுக்கு பொருள் கண்டுபிடித்தவர் ..................
   அ) தாமஸ் சாண்டர் ஆ) ஜேம்ஸ் பிரின்செப்
   இ) சர். ஜான் மார்ஷல் ஈ) வில்லியம் ஜோன்ஸ்

5) "இந்திர விகாரம்" பற்றி குறிப்பிடுவது ..................
   அ) மணிமேகலை ஆ) சிலப்பதிகாரம்
   இ) அசோகர் கல்வெட்டு ஈ) சேரர் நாணயம்

6) கீழ்கண்டவற்றுள் பொருத்தமற்றது எது?
   அ) காமசூத்திரம் - வாத்சாயனர் ஆ) அர்த்தசாஸ்திரம் - கௌடில்யர்
   இ) இண்டிகா - மினாண்டர் ஈ) புத்தசரிதம் - அஸ்வகோஷர்

7) .................. என்ற மருத்துவ நூல் மருந்துகள் மற்றும் மருந்துகள் தயாரிக்கும் முறை பற்றி கூறுகிறது.
   அ) ஹஸ்த்யாயுர்வேதா ஆ) ஆயுர்வேதா இ) நவனிதகம் ஈ) பிருஹத்சம்ஹிதா

8) ''பயணிகளின் இளவரசன்'' என்று புகழப்படுபவர் ..................

அ) பாஹியான் ஆ) யுவான்-சுவாங் இ) இட்சிங் ஈ) மார்கோபோலோ

9) தேர்ந்தெடுத்துப் பொருத்துக:

அ) சிம்ம விஷ்ணு - 1. சாளுக்கியர்

ஆ) முதலாம் ஜெயசிம்மன் - 2. பல்லவர்

இ) முதலாம் ஆதித்தன் - 3. ராஷ்ட்டிரகூடர்

ஈ) முதலாம் துருவன் - 4. சோழர்

அ) 2 1 4 3 ஆ) 2 1 3 4 இ) 2 3 4 1 ஈ) 2 4 1 3

10) உலகப் புகழ்பெற்ற கஜுராஹோ கோயிலைக் கட்டியவர்கள்

அ) ராஷ்டிரகூடர்கள் ஆ) தோமார்கள்

இ) சந்தேலர்கள் ஈ) பரமாரர்கள்

11) பொ.ஆ. 800-ஐச் சேர்ந்த மானூர் கல்வெட்டு ................ நிர்வாகம் குறித்த செய்திகளைத் தருகின்றது.

அ) மத்திய அரசு ஆ) கிராமம் இ) படை ஈ) மாகாணம்

12) விஜயநகர அரசின் அரசமுத்திரை

அ) பன்றி ஆ) புலி இ) மீன் ஈ) வில்

13) பக்கீர் எனக் குறிப்பிடப்படுபவர்

அ) இஸ்லாமிய ஞானி ஆ) பௌத்தத் துறவி

இ) இந்துத் துறவி ஈ) சீக்கிய குரு

14) பின்வருவனவற்றில் சரியான கூற்றினைக் கண்டுபிடி.

i) ஷெர்ஷா மேற்கில் உள்ள சிந்து முதல் வங்காளத்தில் உள்ள சோனர்கான் வரையிலான கிராண்ட் டிரங்க் சாலையை சீர்படுத்தினார்.

ii) அக்பர் தனது மிகப்பெரிய படையெடுப்புகளின் மூலமாக மாபெரும் பேரரசிற்கு அடித்தளம் இட்டார்.

அ) (i) மட்டும் சரி ஆ) (ii) மட்டும் சரி

இ) (i) மற்றும் (ii) சரியானவை ஈ) (i) மற்றும் (ii) தவறானவை

15) .................ஐ சேர்ந்த தான்சேனை அக்பர் ஆதரித்தார்.

அ) ஆக்ரா ஆ) குவாலியர் இ) தில்லி ஈ) மதுரா

16) புரந்தர் உடன்படிக்கை, சிவாஜிக்கும் ................க்கும் இடையே கையெழுத்தானது.

அ) அஃப்சல்கான் ஆ) செயிஷ்டகான்

இ) ஜெய்சிங் ஈ) ஔரங்கசீப்

17) நயங்கார அமைப்பை உருவாக்கியவர்

அ) இரண்டாம் சரபோஜி ஆ) இராஜா தேசிங்கு

இ) கிருஷ்ணதேவராயர் ஈ) பிரதாப்சிங்

18) ................. போர்த்துகீசியரின் கருப்பர் நகரமாகும்.

அ) மயிலாப்பூர் ஆ) சாந்தோம் இ) பரங்கிமலை ஈ) பழவேற்காடு

19) இந்தியாவில் ஆங்கில மொழியை அலுவல் மொழியாகவும், பயிற்று மொழியாகவும் அறிமுகப்படுத்திய ஆண்டு?

அ) 1835 ஆ) 1837 இ) 1854 ஈ) 1857

20) சந்தால் கிளர்ச்சி நடைபெற்ற ஆண்டு

அ) 1831-32 ஆ) 1855-56 இ) 1859-60 ஈ) 1845-46

## பிரிவு - II

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும். 7×2=14**

**வினா எண் 30க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.**

21) பெருங்குளம் சிறுகுறிப்பு வரைக.

22) மும்மணிகள் குறிப்பு வரைக.

23) "சத்ரப்கள்" பற்றி நீவிர் அறிவது யாது?

24) அலகாபாத் பாறைக் கல்வெட்டுக் குறித்து கூறுக.

25) பாலவம்ச ஆட்சியின் போது நாளந்தா பல்கலைக்கழகத்தின் முக்கியத்துவத்தை விவரி.

26) நாற்பதின்மர் அமைப்பு

27) தலைக்கோட்டைப் போர்

28) இராமனந்தரின் போதனைகள் யாவை?

29) சரஸ்வதி மஹால் நூலகம் பற்றி சிறுகுறிப்பு வரைக.

30) கைவினைப் பொருட்கள் உற்பத்தி பற்றி சிறுகுறிப்பு வரைக.

## பிரிவு - III

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். 7×3=21**

**வினா எண் 40க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.**

31) தொடக்க வேதகால சமூகத்திற்கும் பின் வேதகால சமூகத்திற்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை காட்டுக.

32) இந்தியாவில் மகா அலெக்சாண்டரின் படையெடுப்பின் தாக்கங்களைக் குறிப்பிடுக.

33) கௌதமிபுத்திர சதகர்னியின் சாதனைகள்.

34) குப்தர் காலத்தில் அறிவியல் வளர்ச்சி குறித்து விவரிக்கவும்.

35) மாலிக்காஃபூரின் தென்னிந்தியத் தாக்குதல்கள் குறித்து எழுதுக.

36) மார்க்கோபோலோவின் பயணக்குறிப்புகள்.

37) கோல்கொண்டா கோட்டை எங்கே கட்டப்பட்டது? அதன் அமைப்பை விவரி.

38) "தீன் இலாஹி" பற்றி நீவிர் அறிவது யாது?

39) மூன்றாம் பானிப்பட் போரின் விளைவுகள்.

40) சார்லஸ் உட் அறிக்கை.

## பிரிவு - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** **7×5=35**

41) திட்டமிடப்பட்ட நகரங்களான ஹரப்பா, மொகஞ்சதாரோ பற்றி எழுதுக. **(அல்லது)**
இந்தியாவில் பௌத்தம் வீழ்ச்சி அடைந்ததற்கான காரணங்கள் யாவை?

42) மௌரிய ஆட்சியமைப்பின் முக்கியக் கூறுகளை விவரிக்கவும். **(அல்லது)**
''குப்தர் காலம் பண்டைய இந்தியாவின் பொற்காலம்'' விவாதிக்கவும்.

43) அலா-உத்-தின் கில்ஜியின் பொருளாதாரச் சீர்திருத்தங்களை விவாதிக்கவும். **(அல்லது)**
பின்வருவன குறித்து சிறுகுறிப்பு வரைக.
(அ) புறவுவரி திணைக்களம் (ஆ) தாராசுரம் கோவில் (இ) தஞ்சை பிரகதீஸ்வரம்
(ஈ) கங்கை கொண்ட சோழபுரம் (உ) குடவோலை முறை

44) கிருஷ்ணதேவராயரின் சாதனைகளை விவரி. **(அல்லது)**
பக்தி இயக்கத்தின் சிறப்பியல்புகளை வரிசைப்படுத்துக.

45) ''வருவாய் நிர்வாகத்தில் ஷெர்ஷா அக்பரது முன்னோடி'' - விளக்குக. **(அல்லது)**
முகலாயக் கட்டடக்கலையின் சிறப்பம்சங்களைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

46) சிவாஜியின் இராணுவ அமைப்பு அவரது வெற்றிக்கு எவ்வாறு வழிவகுத்தது? **(அல்லது)**
வங்காளத்தின் உண்மையான ஆட்சியாளர்களாக ஆங்கிலேயர் எவ்வாறு எப்பொழுது மாறினர்?

47) முகலாயர் கால முக்கிய வரலாற்று நிகழ்ச்சிகள் ஏதேனும் ஐந்தினை காலக்கோட்டில் குறிக்கவும். **(அல்லது)**
குப்தர்களின் ஆட்சிப் பகுதியில் கீழ்கண்ட இடங்களை குறிப்பிடுக.
(அ) மதுரா (ஆ) பாடலிபுத்திரம் (இ) நாளந்தா (ஈ) சாஞ்சி (உ) உஜ்ஜயினி

*******